திரு. ஆ. நடராசன் : கோவை நகராட்சியில் லாரிகள் மூலம் விநியோகிக்கப்படும் குடிதண்ணீருக்குக் கட்டணம் வசூலிக்கப் படுகிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதைப்பற்றிய தகவல் இல்லை.

திரு கு. ரமணி : எல். ஐ. சி. யிடமிருந்து கடன் வாங்கியதால் வட்டி கட்ட வேண்டியிருக்கிறது, அசல் கட்டவேண்டியிருக்கிறது. அதற்கு ஏற்கனவே ஒப்புதல் கொடுத்துள்ளதால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். கோவை நகரம் மட்டுமல்ல, ஏற்கனவே அந்த வட்டாரத்தில் இருக்கும் சிங்கா நல்லூர் முனிசிபால்டியை எல்லாம் சேர்த்து பல கிராமங்களும் இந்தத் தண்ணீரைப் பெறுகின்றன. அப்படி இருக்க கோவை நகர மக்கள் மீது மட்டும் இந்த வரியை விதிப்பது நியாயமா? எல். ஐ சி. யிடமிருந்து வாங்கிய பணத்திற்கான வட்டி அசல் எல்லாவற்றையும் மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டுதான் மக்களிடம் வசூல் செய்துதான் தண்ணீர் கொடுப்பது என்பதுதான் கொள்கையா?

மாண்புமிகு திரு, கா. காளிமுத்து : தண்ணீரைப் பயன்படுத்து கிறவர்கள்தான் அதற்குரிய வரியைத் தந்தாக வேண்டும்.

நகராட்சிப் பேருந்து நிலையம், சிதம்பரம்.

* வினா எண். 549—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரம் நகராட்சிப்பேருந்து நிலையம்கட்டப்பட்டும் திறக்கப்படாததற்கான காரணம் யாது ?

(ஆ) எவ்வளவு ரூபாய் செலவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) தற்போது பயன்படுத்தப்படுகிறது.

(ஆ) ரூ. 13.36 இலட்சம்.